1995 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறு தொகுதி, திருவையாறு பேரூராட்சியில் உள்ள கல்லூரி அரசர் கல்லூரி; அது அரசு கல்லூரி அல்ல. அது ஒரு உதவி பெறும் தனியார் கல்லூரியாக இருக்கிறது. கல்லூரி நிர்வாகம் மாணவர்களுக்கு தங்கும் உணவு விடுதி அமைக்க முன் வந்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டால், தேவைப்படும் மொத்தத் தொகையில் பாதித் தொகையை அரசு இரு தவணைகளில் அளிக்கும் திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது. இது குறித்த விண்ணப்பம், கல்லூரி நிர்வாகத்திடம் இருந்து உரிய முறையில் கிடைக்கப்பெற்றால், தேவை மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பரிசீலித்து அரசு மேல் நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 356, திரு. வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

356—

கண்டமங்கலம் ஒன்றியத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***22664—**திரு. வீ. சுப்பிரமணியன் :*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கண்டமங்கலம் ஒன்றியம், சின்னகுப்பம், பக்கிரிமேடு, உப்புமுத்தாம்பாளையம் ஆகிய கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கண்டமங்கலம் ஒன்றியம், சின்னகுப்பம், பக்கிரிமேடு, உப்புமுத்தாம்பாளையம் ஆகிய இடங்களுக்குக் கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வீ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து உள்ளார்கள். பல்வேறு சோதனைகளை சாதனைகளாக ஆக்கி நெஞ்சை உயர்த்தி பொற்கால ஆட்சி நடத்திவரும், நான் வணங்கும் தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாத மலர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக ஆக்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வினாவில் குறிப்பிட்டுள்ள அந்த 3 கிராமங்களும் பஞ்சமாதேவி மற்றும் பூவரசன் குப்பம் ஆகிய இரண்டு

ஊராட்சிகளைச் சேர்ந்த கிராமங்கள் ஆகும். மேலும் உப்புநீர் உள்ளதால்தான் அந்தக் கிராமம் உப்புமுத்தாம்பாளையம் என்று அழைக்கப்படுகிறது. பக்கிரிமேடு கிராமத்திலும் அதே உப்புநீர் தான். உப்புநீராக உள்ளதால்தான் குடிநீர்ப் பிரச்சினையில் அந்தப் பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, சின்னக்குப்பம் கிராமத்தில் புதிதாக போர்வெல்லும் அமைக்கப்பட்டுள்ளது. அதைப் பயன்படுத்தி, முனைப்போடு செயலாற்றிக் கொண்டிருக்கும் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த 1995-96 ஆம் நிதி ஆண்டிலேயே கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.15

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற இந்த சின்னகுப்பம் கிராமத்தில் கடந்த ஒன்றரை மாதத்திற்கு முன்பாகத்தான் சுமார் 77 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டுத் தொகையில் 92 மீட்டர் அடி ஆழம் உள்ள ஆழ்குழாய்க் கிணறு ஒன்று போடப்பட்டிருக்கிறது. இதில் முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டிய விஷயம் என்னவென்று சொன்னால் இந்த இரண்டு கிராமங்களுக்கும் போதுமான அளவு குடிநீர் வழங்க வேண்டுமென்றும் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணையின் பேரிலே, அவர்களுக்கு வழங்கப்பட்ட ஒரு மனுவை அடிப்படையாக வைத்து அவர்கள் இட்ட கட்டளையின் பேரில் கடந்த ஒன்றரை மாதத்திற்கு முன்பாக இந்த ஆழ்குழாய்க் கிணறு போடப்பட்டிருக்கிறது. அந்த ஆழ்குழாய்க் கிணற்றிலே நீர் வரத்து அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் இந்த சின்னகுப்பம் கிராமத்திற்கு அருகாமையில் இருக்கின்ற இந்த பக்கிரிமேடும் மற்றும் சின்னக்குப்பத்தையும் சேர்த்து ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டியாக வேண்டுமென்ற அந்த கோரிக்கையையும் ஏற்று இந்த நிதி ஆண்டிலே திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை இந்த ஆண்டு நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 357, திருமதி ரமணி நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்தமடை பற்றியது. இடம் தெரியும் என்றால் நீங்கள் கேட்கலாம். இப்போதே பதில் வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.